
# දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය - වවුනියාව
# மாவட்ட செயலகம் - வவுனியா
# District Secretariat - Vavuniya




ආයතනයේ නම**:- දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය - වවුනියාව**

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

நிறுவனத்தின் பெயர்: **மாவட்ட செயலகம், வவுனியா**

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

Name of the Institution:- **District Secretariat – Vavuniya**

Submission of observations of Hon.Minister and steps taken with regard to the reports tabled by the Parliamentary Committee on Public Accounts in terms of Standing Order No.119(4)

# 2023

**இலங்கை பாராளுமன்றத்தின் அரச கணக்கு தொடர்பாக செயற்குழுவின் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் கட்டளை (119/4) தொடர்பாக அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்படும் நடவடிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்**

பாராளுமன்ற தொடர் இல. 492

மாவட்ட செயலகம், வவுனியா.

| **இல** | **அரச கணக்கு செயற்குழுவினால் காட்டப்பட்ட குறைபாடுகள் மற்றும் வழிகாட்டல்கள்** | **கணக்கீட்டு அலுவலரால் எடுக்கப்பட்ட செயற்பாடுகள் மற்றும் வழிகாட்டல்கள்/ தற்போதைய முன்னேற்றம்** |
|---|---|---|
| 01 | பிணைப்பதிவேடு புதுப்பிக்கப்படவில்லை | பிணைப்பதிவேடு தற்போது புதுப்பிக்கப்பட்டுள்ளது. |
| 02 | கடனாளிகளின் பதிவேடு புதுப்பிக்கப்படவில்லை | 2024ஆம் ஆண்டிலிருந்து கடனாளிகளின் பதிவேடு புதுப்பிக்கப்பட்டுள்ளது. |
| 03 | அடியிதழ் சேர் புத்தகம் இற்றைப்படுத்தல் அடிப்படையில் பேணப்படாதிருந்தது | 2024ஆம் ஆண்டிலிருந்து அடியிதழ் சேர் புத்தகம் இற்றைப்படுத்தி பேணப்பட்டு வருகிறது. |
| 04 | வாகனங்களின் பதிவேடு புதுப்பிக்கப்படவில்லை | 2025ஆம் ஆண்டிலிருந்து வாகனங்களின் பதிவேடு புதுப்பிக்கப்பட்டுள்ளது. |
| 05 | அதிகாரமற்ற அத்துமீறல் தொடர்பான பதிவேடு கால அடிப்படையில் பராமரிக்கப்படவில்லை | அதிகாரமற்ற அத்துமீறல் தொடர்பான விபரங்கள் கணினி மயப்படுத்தப்பட்டு நிதியாண்டிலிருந்து பதிவேடு பராமரிக்கப்பட்டு வருகிறது. |
| 06 | ஆபத்துக்கள் தொடர்பான பதிவேடு கால அடிப்படையில் பராமரிக்கப்படவில்லை | 2024ம் ஆண்டு தொடக்கம் ஆபத்துக்கள் தொடர்பான பதிவேடு பராமரிக்கப்பட்டு அதனை அடிப்படையாகக் கொண்டே உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. ஓவ்வொரு நிதியாண்டிற்கும் இந்த நடைமுறையே பின்பற்றப்பட்டு வருகின்றது |
| 07 | 2004.05.11ஆம் திகதிய 171/2004ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் மென்பொருள் தொடர்பான முதலாவது கடவுச் சொல்லை கணக்காளர் அல்லது அவரிடம் அனுமதி பெற்றுள்ள பதவிநிலை உத்தியோகத்தர் மட்டும் பயன்படுத்தவில்லை | 2025ஆம் ஆண்டிலிருந்து மென்பொருள் தொடர்பான முதலாவது கடவுச்சொல் கணக்காளரால் மட்டும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது |
| 08 | 2004.05.11ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் மென்பொருள் தொடர்பான முதலாம் இரண்டாம் மற்றும் மூன்றாம் கடவுச்சொற்கள் மூன்று மாதங்களிற்கு ஒருமுறை மாற்றப்படவில்லை | 2025ஆம் ஆண்டிலிருந்து 2004.05.11ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் மென்பொருள் தொடர்பான முதலாம் இரண்டாம் மற்றும் மூன்றாம் கடவுச்சொற்கள் மூன்று மாதங்களிற்கு ஒருமுறை மாற்றப்பட்டு வருகின்றது. |

| | | |
|---|---|---|
| 09 | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களிற்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் அனுப்பப்படவில்லை | கணக்காளர் தலைமை அதிபதிக்கு தற்காலிக பதில் 3 நாட்களுக்குள் வழங்கப்பட்டு வருகின்றது. ஒரு மாத காலத்திற்குள் முழுமையான பதில்கள் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 10 | மேற்படி சுற்றறிக்கையின் 13ஆம் பந்தியின் பிரகாரம் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுதல் இணைப்பாக்கம் செய்யப்படுவதற்காக பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவரை நியமித்து கொம்ட்ரோலர் நாயகம் அலுவலகத்திற்கு அறிவிக்கப்படாமை | மேற்படி சுற்றறிக்கையின் 13ஆம் பந்தியின் பிரகாரம் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுதல் இணைப்பாக்கம் செய்யப்படுவதற்காக 2026.01.01ஆம் திகதியிலிருந்து திரு.மி.யேசுறெஜினோல்ட், பிரதம கணக்காளர் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். |
| 11 | காலாவதியான வைப்புகள் தொடர்பாக நிதி ஒழுங்குவிதிகள் 571இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை | காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு தற்போது காலாவதியான வைப்புக்கள் எதுவம் காணப்படவில்லை. |
| 12 | நி.ஒ 371 இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட எல்லையை மீறி பணி குறித்த இடைக்கால கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தன | நி.ஒ 371 இன் பிரகாரம் தற்போது இடைக்கால கட்டுநிதி எல்லைக்குட்பட்டு வழங்கப்படுகிறது. |
| 13 | கட்டுநிதி ஒப்பீட்டு கூற்றுக்கு அமைய அறிக்கையில் கண்டறியப்பட்ட வேறுபாடுகளை அடையாளம் கண்டு செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை | தற்போது அவை ஒப்பீடு செய்யப்பட்டு வேறுபாடுகள் இல்லாத வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 14 | திரட்டப்பட்ட வருமானம் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட்டு அல்லது அவற்றை வைப்புக்கணக்கில் வைப்பிலிட்டு ஒருமாதத்திற்கு குறைவான காலப்பகுதியில் வருமானக் கணக்கில் வரவு வைக்கப்படாமை. | தற்போது திரட்டப்பட்ட வருமானம் வருமானக் கணக்கில் ஒருமாத காலத்திற்குள் வரவு வைக்கப்படுகின்றது. |
| 15 | 2017.09.20ஆந் திகதிய 04/2017இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் பணியாட்டொகுதி பற்றிய விபரங்கள் காலாண்டின் முடிவில் ஒருமாத காலப்பகுதிக்குள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு ஆற்றுப்படுத்தப்படாமை | பணியாட்தொகுதி பற்றிய விபரங்கள் காலாண்டின் முடிவில் ஒருமாத காலப்பகுதிக்குள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டு வருகின்றது. இறுதியாக 2026.04.06 ஆம் திகதியில் அனுப்பப்பட்டுள்ளது. |
| 16 | மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்கள் மாதந்தோறும் இடம்பெறவில்லை | செயலாளர் உள்நாட்டலுவல்கள் பிரிவின் 2025.09.01 திகதிய சுற்றுநிருப இல 03/2025 இன் பிரகாரம் காலாண்டிற்கு ஒருமுறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நடைபெற்று வருகின்றது. இந்த வருடம் 1வது மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் 2026.02.26ஆம் திகதியில் நடாத்தி முடிக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| 17 | மாவட்டச் செயலாளரால் கூட்டப்பட்ட பிரதேச செயலாளர் கூட்டங்கள் மாதாந்தம் இடம்பெறவில்லை | மாவட்டச் செயலாளரால் பிரதேச செயலாளர்களிற்கிடையிலான கூட்டங்கள் தற்போது மாதாந்தம் இடம் பெற்று வருகின்றது. |
| 18 | மாவட்ட வீடமைப்புக்குழு மாதந்தோறும் கூட்டப்படவில்லை | மாவட்ட வீடமைப்பு குழு கூட்டம் 2025ஆம் ஆண்டிலிருந்து திட்டமிடப்பட்டு நடைபெற்றுள்ளது. இது தொடர்பான விடயங்கள் மேலதிகமாக மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்திலும் கலந்துரையாடப்பட்டு வருகிறது. |
| 19 | நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம் தகுதியான/ஒப்புதலளிக்க மறுக்கின்ற/பாதகமான மட்டத்தில் நிலவியது | 2024ஆம் ஆண்டில் முனைப்பொழியுடனான அறிக்கை கிடைக்கப்பெற்றுள்ளது. |
| 20 | உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 2/2018 சுற்றறிக்கைக்கிணங்க நிறுவனத்தால் ஈடேற்ற வேண்டிய 05 முதன்மைச்சேவைகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை | உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 2/2018 சுற்றறிக்கைக்கிணங்க நிறுவனத்தால் ஈடேற்ற வேண்டிய 05 முதன்மைச்சேவைகள் 2022இல் இனங்காணப்பட்டுள்ளது |
| 21 | இனங்காணப்பட்ட சேவைகளுக்காக இலக்குகள் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை | இனங்காணப்பட்ட சேவைகளுக்காக இலக்குகள் 2022 இல் தீர்மானிக்கப்பட்டிருந்தது |
| 22 | மீளாய்வாண்டின் செயல்திறன் நோக்கம் குறிப்பிட்ட திகதிக்குள் சமர்ப்பிக்கப்படவில்லை | 2023ஆம் ஆண்டில் 2023.02.09 இல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மீளாய்வாண்டின் செயல்திறன் நோக்கம் குறிப்பிட்ட திகதிக்குள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| 23 | இனங்கண்ட செயற்சுட்டியின் அடைவு 24% ஐ விட குறைந்த மட்டத்தில் நிலவியது | 2025ஆம் ஆண்டில் மாவட்டச் செயலகத்தின் இலக்குகளை அடைவதன் சதவீதம் (இனங்கண்ட செயற்சுட்டியின் அடைவு) 90% ஐ எட்டியுள்ளது. |
| 24 | திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புக்கள் மூலமாக வழங்கப்படடிருந்த பயிற்சி வாய்ப்புக்களின் அளவு 50%ஐ பார்க்கிலும் தாழ்ந்த மட்டத்திலேயே நிலவியது. | தேசிய் பாதீட்டு சுற்று நிருப இல 03/2022, 2022.04.26 ஆம் திகதிய சுற்றுநிருபத்தின் 02ம் பந்தியின் படி திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புக்களை செலவீன கட்டுப்பாடு காரணமாக நடாத்த முடியவில்லை. எனினும் 2025 ஆம் ஆண்டிலிருந்து மாதாந்தம் நான்கு பயிற்சி வாய்ப்புகள் நடாத்தப்பட்டு 100% இல் காணப்படுகின்றது. |
| 25 | கணக்காய்வார் நாயகத்தின் அறிக்கையின் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவில்லை | இதுவரை வழங்கப்பட்ட அனைத்து ஆலோசனைகளும் அமுல்ப்படுத்தப்பட்டுள்ளன. |
| 26 | அரச உத்தியோகத்தர்கள் தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குறித்த அறிக்கைகளை சமர்ப்பிக்கவில்லை. | அரச உத்தியோகத்தர்கள் தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குறித்த அறிக்கைகளை 2025ஆம் ஆண்டிலிருந்து சமர்ப்பித்துள்ளனர். |
| 27 | மாவட்ட சுற்றுச்சூழல் குழு இரண்டு மாதங்களுக்கு ஒரு முறையாவது கூட்டப்படவில்லை. | வவுனியா மாவட்ட சுற்றுச்சூழல் குழு கூட்டங்கள் நடைபெற்று வருகின்றது. இது தொடர்பான விடயங்கள் அனர்த்த முகாமைத்துவ குழு கூட்டம், காணிப் பயன்பாட்டு குழு கூட்டம் மற்றும் மாவட்ட விவசாயக்குழு கூட்டத்திலும் கலந்துரையாடப்பட்டு வருகின்றது. நிதி ஆண்டில் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

பி.ஏ.சரத்சந்ர,
மாவட்ட செயலாளர்
மாவட்ட செயலகம்,
வவுனியா.

ப.அ.சரத்சந்ர
மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர்
வவுனியா.

மி.யேசுறெஜினோல்ட்,
பிரதம கணக்காளர்,
மாவட்ட செயலகம்,
வவுனியா.

எம். யேசு றெஜினோல்ட்,
பிரதம கணக்காளர்,
மாவட்ட செயலகம்,
வவுனியா.

## செயலாளரின் பரிந்துரை

மாவட்ட செயலாளரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவட்ட செயலாளரிக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

S. Alokabandara
Secretary
Ministry of Public Administration,
Provincial Councils and Local Government

## அமைச்சரின் பரிந்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

அரசாங்க கணக்குக்குழு மூலம் மாவட்ட செயலாளரிற்கு வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, அக்குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சின் செயலாளரிற்கு நான் அறிவுறுத்தியுள்ளதுடன், அச்செயற்பாடுகள் மூலம் 2026 ஆம் ஆண்டிற்குள் அதன் அடைவு மட்டத்திலிருந்து உயர் மட்டத்தை எட்ட முடியும் என்று எதிர்பார்க்கின்றேன்.

மாண்புமிகு (பேராசிரியர்) ஏ. எச். எம். எச். அபயரத்ன அவர்கள் (பா.உ)
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

Prof. A.H.M.H. Abayarathna
Minister of Public Administration, Provincial
Councils and Local Government
Independence Square, Colombo 07.